9.6.2026

அ.வ.எண்.12/2008

வா.சா.2 கோவிந்தசாமி த/பெ. இராமசாமி

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு தற்போது 68 வயதாகிறது. நான் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு சென்று 50 ஆண்டுகள் இருக்கும். நான் 1979ம் ஆண்டு விவசாய நிலம் வாங்கி கள்ளக்குறிச்சி சென்று விட்டேன். இராசிபுரத்திற்கு நல்ல மற்றும் கெட்ட நிகழ்வுகளுக்கு வருவேன் என்றால் எனக்கு இராசிபுரம் சந்திரசேகரபுரத்தில் நிலம் உள்ளதால் அவ்வப்போது வருவேன். சந்திரசேகரபுரத்தில் உள்ள எனது நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, பட்டா எண்ணும் தெரியாது. கள்ளக்குறிச்சியில் உள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ச.எண்.22/4 ஆகும். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

இந்த வழக்கினை வாதி சுந்தரம் பெருமாள் மற்றும் முத்துசாமி ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளார். வேறு யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. பாகம் கொடுக்கவில்லை என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எத்தனை சர்வே எண்ணை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது, எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்கள் வாதி சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது.

பிரமாண வாக்கு மூலம் தயார் செய்யும் போது ஆவணங்களை வைத்திருந்தேனா என்றால் அதை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எத்தனை ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் கொடுத்த ஆவணங்கள் என்ன ஆவணங்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ள ஆவணங்கள் பற்றி அதன் தேதி பற்றி தெரியுமா என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. தாவா சொத்துக்கள் பெரிய ஆறுமுக படையாச்சிக்கு தனிப்பட்ட சொத்துக்களா என்றால் பொதுவான சொத்துக்கள் ஆகும். அந்த பொது சொத்துக்கள் எவ்வாறு கிடைத்தது என்றால் அவர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும். எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

பெரிய ஆறுமுக படையாச்சி மற்றும் அவரது குடும்பத்தினர் வாய்மொழி பாக பிரிவினை செய்து கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆனால் கேள்விப்பட்டுள்ளேன். பெரிய ஆறுமுக படையாச்சி குடும்பத்திற்கு மொத்தமாக 34 ஏக்கர் நிலம் இருந்தது. 4 பாகமாக பிரித்துக் கொண்டார்கள். யார் யாருக்கு எத்தனை ஏக்கர் கிடைத்தது என்றால் அய்யனார் படையாச்சிக்கு 8 ஏக்கருக்கு மேலும், நடுப்பையன் என்பவருக்கு 7 ஏக்கரும், பழனி படையாச்சிக்கு 10 ஏக்கரும், சின்னதம்பி படையாச்சிக்கு 8 ஏக்கரும் பிரித்துக் கொண்டார்கள். அந்த சொத்துக்கள் அனைத்தும் சந்திரசேகரபுரம் கிராமத்தில் அமைந்துள்ளது. நான் சொல்வது போல் வாய்மொழி பாகபிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 1972ம் ஆண்டு நான் மேலே சொன்ன நான்கு நபர்களும் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டார்கள்.

நானும், வாதியும் உறவினர்கள் ஆவோம். அவர் பெரியபாட்டனார் வகையறாவை சேர்ந்தவர். நான் சின்னபாட்டனார் வகையறாவை சேர்ந்தவர். 12.12.1994ம் தேதியில் முத்துசாமி பெயரில் ஒரு கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 5.9.1983 தேதியில் பெருமாள் படையாச்சி மற்றும் முத்துசாமி படையாச்சி பெயரில் சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டுள்ளதா என்றால் குள்ளுபடையாச்சி கிரையம் பெற்று அவர்கள் பெயரில் எழுதி வைத்தார். நான் தவறாக சொல்கிறேன் என்றும், பெருமாள் படையாச்சி மற்றும் முத்துசாமி படையாச்சி தனிப்பட்ட முறையில் சுயமாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்கு மூலத்தில் நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சிக்கு ரூ.10,000/- தொகை கொடுக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது அதை நான் சொல்லவில்லை.

தாவா முதல் அயிட்ட சொத்து முழுவதும் முத்துசாமி என்பாவர் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா 3ம் அயிட்ட சொத்தும் முத்துசாமி மற்றும் பெருமாள் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் முதல் பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் வாதிக்கு உறவினர் என்பதாலும் மற்றும் முத்துசாமி சொத்தினை அபகரிக்கவேண்டும் என்பதற்காக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் உக்கிலிபட்டியார் வகையறாவை சேர்ந்தவர் என்றால் சரிதான். உக்கிலிப்பட்டி என்ற ஊர் எங்கு உள்ளது என்றால் எனது முன்னோர்கள் 2 முதல் 3 தலைமுறைக்கு முன்னார் இங்கே வந்துவிட்டார்கள் அதனால் அந்த ஊர் எங்க உள்ளது என்று தெரியாது. தோராயமாக எனது மன்னோர்கள் 200 ஆண்டுகளுக்கு முன்பு சந்திரசேகரபுரத்திற்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான். யார் யார் முதலில் வந்தார்கள், எத்தனை குடும்பங்கள் வந்தது என்று எனக்கு தெரியாது. பெரிய ஆறுமுக படையாச்சிக்கு அய்யனார் படையாச்சி, நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சி, பழனி படையாச்சி மற்றும் சின்னதம்பி படையாச்சி ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். உக்கிலிபட்டியார் வகையறாவில் எத்தனை குடும்பங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது.

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்துள்ளதா என்றால் இல்லை. இன்று நீதிமன்றத்திற்கு என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் நானே வந்தேன். இந்த வழக்கு எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு எத்தனை நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் உள்ள நபர்கள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு முதன் முறையாக எப்போது விசாரணைக்கு வந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் இந்த வழக்கில் எந்த தேதியில் வந்து பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் எந்த வழக்கறிஞரை சந்தித்தேன் என்றால் நான் யாரையும் சந்திக்கவில்லை.

பிரமாண வாக்கு மூலத்தில் நான் நீதிமன்றத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கையொப்பம் செய்வதற்கு முன்பு நான் யாரையும் சந்திக்கவில்லை என்றால்

ஞாபகமில்லை. எனது பிரமாண வாக்கு மூலத்தில் வயதை சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் குறிப்பிட்டுள்ள பத்திரங்களில் கண்டுள்ள சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிலங்கள் யார் யார் பெயரில் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிலங்கள் என்ன வகைப்பாட்டை சேர்ந்தவை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பாகபிரிவினை எந்த தேதியில் நடைபெற்றது, யார் யாருக்கிடையே நடைபெற்றது, யாருக்கு எந்த சொத்து ஒதுக்கீடு செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

குள்ளபடையாச்சிக்கு பாகபிரிவினையில் 1ஏக்கர் 20செண்ட் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டாத சொல்லும் நிலம் எங்கு உள்ளது என்றால் சந்திரசேகரபுரம் ஓனான்கரடு என்ற இடத்தில் அமைந்துள்ளது. தாவா முதல் அயிட்ட சொத்து யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சி பெயரில் வாங்கப்பட்டது. அந்த சொத்து நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சியின் சுயார்ஜித சொத்தா என்றால் பொது சொத்தாகும். நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சி அந்த சொத்தினை ஒரு சுப்பரமணிய அய்யர் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் வாங்கியிருக்கலாம். முத்துசாமி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தையும், எடுத்துவாய்நத்தம் கிராமத்தில் முத்துசாமி மற்றும் பெருமாள் ஆகியோர் பெயரில் ஏற்பட்ட கிரையம் நான் முன்னின்று வாங்கி வைத்தேனா என்றால் நான் முன்னின்று வாங்கி வைத்தேன். அந்த பத்திரங்களில் நான் சாட்சி கையொப்பம் ஏதேனும் செய்துள்ளேனா என்றால் இல்லை. முத்துசாமி பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்திற்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றால் பணம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

முத்துசாமி பெயரில் உள்ள சொத்தை பொறுத்து ஜெகநாதன் என்பவருக்கு பொது அதிகாரம் வழங்கி அந்த சொத்து விற்பனை ஆகியுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஜெகநாதன் அந்த சொத்தை விற்பனை செய்து அந்த சொத்துக்கள் வீட்டு மனைகளாக பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்தில் தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை கிழமேலாக நில ஆர்ஜிதம் செய்து அதில் சாலை அமைத்துள்ளார்களா என்றால் அமைத்துள்ளார்கள். அந்த இடத்தில் 8ம் பிரதிவாதி வீட்டு மனைகளாக பிரிவனை செய்து பல நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது அந்த இடத்தில் பல நபர்கள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான்.

இராசிபுரம் முதல் சந்திரசேகரபுரம் செல்லும் சாலையின் தென்புறத்தில் அய்யனார் என்பவர் வீடு கட்டியுள்ளார் மற்றும் டீ கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அங்கு நந்தி என்பவர் மகன் டாக்டர் சதீஸ்குமார் ஒரு வியாபார வளாகம் கட்டியுள்ளார் என்றால் நான் பார்த்ததில்லை. ஜோசியர் கருப்பன் என்பவர் இருக்கிறாரா என்றால் தெரியாது. 12ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது எங்கள் ஊர்காரர் என்று சாட்சி ஒப்புக் கொண்டார். 12ம் பிரதிவாதியையும் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளார்கள் என்றால் தெரியாது. 12ம் பிரதிவாதி அந்த சொத்தில் ஒரு மனையை கிரையம் பெற்றுள்ளார் என்றும், அந்த சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

தாவா முதல் அயிட்ட சொத்து முத்துசாமியின் சுயார்ஜித சொத்து என்றால் சரியல்ல.

சுயார்ஜித சொத்து என்பதால் 12ம் பிரதிவாதி அதில் ஒரு மனையை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. நான் வாதியின் உறவினர் அல்ல என்றும், பணத்திற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- K. கோவிந்தசாமி

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.